

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | ஜனவரி 17, 2019 | புரட்சி 18 | முழக்கம் 01 | விலை: ரூ.3.00


## மண்டல் பரிந்துரை அமுலாக்க 10 ஆண்டுகள்

# மூன்றே நாட்களில் வந்துவிட்டது ‘பொருளாதார’ இடஒதுக்கீடு

பொதுப் போட்டியில் கல்வி மற்றும் வேலை வாயப்புகளில் மட்டும் 10 சதவீத இடஒதுக்கீட்டை பொருளாதார அடிப்படையில் ஒதுக்கீடு செய்து அதற்கான சட்டத்திருத்தத்தையும் நாடாளுமன்றத்தில் இரு அவையிலும் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

- இடஒதுக்கீடு சமூக கல்வி ரீதியாகப் பின் தங்கியவர்களுக்குக் கொண்டு வரப்பட்டது; பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு அல்ல. நாடாளுமன்றத்தில் 1951ஆம் ஆண்டு இது குறித்து விவாதங்கள் நடந்தபோது பிரதமர் நேரு, சட்ட அமைச்சர் அம்பேத்கர், ‘பொருளாதாரம்’ என்ற சொல்லையும் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை புறந்தள்ளினர்.
- வி.பி.சிங் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்புகள் 27 சதவீத இடஒதுக்கீட்டை அமுலாக்கும் ஆணையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை 9 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு விசாரித்தது. பிரதமராக இருந்த நரசிம்மராவ், திறந்த போட்டிக்கான இடங்களில் முன்னேறிய ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் 10 சதவீத ஒதுக்கீடு ஆணையை பிறப்பித்தார். உச்சநீதிமன்றம் நரசிம்மராவ் ஆணையை சட்டத்துக்கு எதிரானது என்று கூறி விட்டது.
- குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சி 2016இல் முன்னேறிய ஜாதியினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு செய்து பிறப்பித்த ஆணையை சட்டத்துக்குப் புறம்பானது என்று கூறி குஜராத் உயர்நீதிமன்றம் இரத்து செய்துவிட்டது.
- பீகாரில் கர்பூரிதாகூர் முதல்வராக இருந்த போதும் உ.பி.யில் மாயாவதி முதல்வராக இருந்த போதும் முன்னேறிய சாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள் நீதிமன்றங்களால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன.
- இடஒதுக்கீட்டுக் கொள்கையில் பொருளாதார அளவுகோலைப் புகுத்துவது மிகவும் ஆபத்தானது. ‘பொருளாதாரம்’ என்பது மாற்றத்துக்கு உட்பட்டது. ‘ஜாதி-சமூக’ பிற்படுத்தப்பட்ட தன்மை என்பது வரலாற்று ரீதியாக இழைக்கப்பட்ட ஜாதி ஒடுக்கு முறைகளால் உருவானது.
- பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டில் ‘கிரிமிலேயர்’ என்ற பொருளாதார வரம்பை 9 நீதிபதிகளடங்கிய உச்சநீதிமன்ற அமர்வு ‘இந்திரா சகானி’ வழக்கில் புகுத்தியது என்பதே தவறான வாதம் என்கிறார். மூத்த அய்.ஏ.எஸ். அதிகாரியும் சமூக ரீதியில் ஆழமான புரிதல் உள்ளவருமான பி.எஸ்.கிருஷ்ணன், ‘சமூக கல்வி ரீதியாக’ முன்னேறியவர்களை இடஒதுக்கீட்டிலிருந்து நீக்க வேண்டும் என்று தான் உச்சநீதிமன்றத் தீர்ப்பில் கூறியது என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். இதன் பொருள் இடஒதுக்கீட்டின் பலனை பல தலைமுறையாகப் பெற்று சமூகத்தில் பிற்படுத்தப்பட்டத் தன்மையைக் கடந்தவர்கள் என்பதுதான். பொருளாதாரத்தில் வசதியாகி விட்டார்கள்; அவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டாம் என்பது உச்சநீதிமன்றத் தீர்ப்பு அல்ல என்று சுட்டிக் காட்டுகிறார்.
- ஆண்டுக்கு 2 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்று உறுதி மொழி கூறி ஆட்சிக்கு வந்த மோடி, அதில் மிக மோசமாகத் தோல்வி அடைந்து விட்டார். 2014இல் 49 இலட்சம் வேலை வாய்ப்புகளும், 2015இல் 1.3 இலட்சம் வேலை வாய்ப்புகளும் உருவாக்கப் பட்டன. 2016 ஏப்ரல் மாதத்திலிருந்து ஜூன் வரை உற்பத்தித் துறை, கட்டுமானம், போக்குவரத்து, வர்த்தகத் துறைகளில் 70 ஆயிரம் வேலை வாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டது. லார்சன் அண்ட் டூப்ரோ நிறுவனம், 14,000 ஊழியர்களை பணி நீக்கம் செய்துள்ளது. வேலை வாய்ப்புகளை அதிகம் வழங்கக்கூடிய உற்பத்தித் துறையில் பொருள்களின் விற்பனை 2015-16இல் 3.7 வீதம் குறைந்துள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் வேலையில் இருப்பவர்கள் பணி நீக்கம் செய்யப்படும் நிலை உருவாகி விடும். ‘ஈ காமர்ஸ் துறை’ இலாபத்தில் இயங்காததால் பல்வேறு நிறுவனங்கள் தங்களது ஊழியர்களை பணி நீக்கம் செய்து வருகின்றன. ‘ஸ்நாப் டீல்’ நிறுவனம் மட்டும் 600 ஊழியர்களை பணி நீக்கம் செய்துள்ளது.
- மோடி ஆட்சி வேலை வாய்ப்பை அதிகரிக்க பிரதான் மந்திரி வேலை உருவாக்கும் திட்டம், தீன் தயாள் உபாத்யாயா கிராமின் கவுசல்யா போஜனா என்ற திட்டங்கள் பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. கடந்த 3 ஆண்டுகளில் 11 இலட்சம் வேலைவாய்ப்புகளை மட்டுமே இத்திட்டங்களால் உருவாக்க முடிந்தது. வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டிய துறைகளில் தோல்வி அடைந்த மோடி ஆட்சி திறந்த போட்டியில் பொருளாதார அடிப்படையில் 10 சதவீத இடங்களை ஒதுக்கி வேலை வாய்ப்புகளை வழங்கப் போவதாகக் கூறுவது மிகப் பெரும் மோசடியாகும்.
- முன்னேறிய ஜாதியினருக்கு 10 சதவீத இட ஒதுக்கீட்டை வலியுறுத்தும் அரசியல் சட்டத்தின் 124ஆவது திருத்த மசோதா நாடாளுமன்றம், மாநிலங்களவையில் நிறைவேறி விட்டது. சமூக நீதிக்கு இந்தியாவுக்கே வழிகாட்டும் மாநிலம் தமிழ்நாடு. எனவேதான் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் இதை எதிர்க்கின்றன. காங்கிரஸ் கட்சி கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது தனது தேர்தல் அறிக்கையிலேயே இந்த ‘பொருளாதார’ அடிப்படையிலான இடஒதுக்கீட்டை நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறியிருந்தது. இப்போது பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டு வட மாநிலங்களில் பார்ப்பன உயர்ஜாதியினரின் வாக்குகளைக் குறி வைத்து, மசோதாவுக்கு ஓட்டெடுப்பில் ஆதரவு வழங்கி விட்டது.
- உச்சநீதிமன்றம் பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடுகளை ஏற்கனவே தள்ளுபடி செய்து விட்ட நிலையில் இப்போது என்ன முடிவை எடுக்கும் என்று தெரியவில்லை. இது குறித்து ‘இந்து’ நாளேடு வெளியிட்டுள்ள ஒரு ஆய்வில் இரண்டு கருத்துகளை முன் வைத்துள்ளது.
- இடஒதுக்கீடு இப்போது 60 சதவீதமாகிவிட்டது 50 சதவீதத்துக்கு மேல் இடஒதுக்கீடு போகக் கூடாது என்று வரம்பு கட்டியுள்ள உச்சநீதிமன்றம் வரம்பை நீக்க முன் வருமேயானால் பல மாநில ஆட்சிகள் இடஒதுக்கீட்டின் அளவை உயர்த்த முன்வரக் கூடும். இதனால் ‘முன்னேறிய ஜாதியினருக்கு’ ஏற்கனவே இருந்த வாய்ப்புகள் மாநில அரசு பதவிகளில் குறையக் கூடும். 50 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது என்று தீர்ப்பு வருமானால் ஏற்கனவே அமுலில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கையைக் குறைத்து 50 சதவீதத் துக்குள்ளேயே முன்னேறிய ஜாதியினருக்கு இட ஒதுக்கீட்டைக் கொண்டுவர வாய்ப்புகள் உண்டு. இது சமூக - அரசியல் தளங்களில் கடும் நெருக்கடிகளை உண்டாக்கும்” என்று ‘இந்து’ ஏடு கூறுகிறது.
- இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் இந்த மசோதா, கல்வி மற்றும் தனியார் துறையிலும் முன்னேறிய ஜாதியினருக்கான இடஒதுக்கீட்டை இணைத்திருப்பதாகத் தெரிகிறது. ஏற்கனவே தனியார் துறையில் பார்ப்பன உயர்ஜாதி ஆதிக்கமே மிகுந்திருக்கிறது. தனியார் துறையில் தாழ்த்தப்பட்டோருக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகாலமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. மன்மோகன்சிங் பிரதமராக இருந்தபோது ‘தலித்’ மக்களுக்கு இட ஒதுக்கீடு தருவதற்கான முயற்சிகளை அய்க்கிய முற்போக்குக்

(4 ஆம் பக்கம்)

## பொருளாதார அடிப்படை: மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன?

முன்னேறிய ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு என்ற அமைச்சரவையின் முடிவு வெளி வந்தவுடன், கேரள முதல்வர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பினராய் விஜயன் அதை ஆதரித்தார். கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் எச்சூரி, இந்த அறிவிப்பு தேர்தல் மாய்மாலம் என்றார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழுவும் இதேபோல் ‘மாய்மாலம்’ என்று கூறினாலும் பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டுக்கு தேவை இருக்கிறது என்பதே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. மண்டல் குழு பரிந்துரை அமுல்படுத்திய காலத்திலிருந்தே இந்தக் கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து வருவதாகவும் தலைமைக் குழு அறிவித்துள்ளது.

கேரள முதல்வர் பினராய் விஜயன், இந்த இடஒதுக்கீட்டை ஆதரிக்கும் போது கேரளாவின் மற்றொரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அச்சுதானந்தன் கடுமையாக எதிர்த்துள்ளார். “இடஒதுக்கீடு என்பது பொருளாதாரத் திட்டமல்ல; பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு; ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரானது என்ற அடிப்படையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதுமே அதை எதிர்த்து வந்திருக்கிறது” என்று ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக் குழு ஏற்கவில்லை. அவையில் ஓட்டெடுப்பிலும் ஆதரித்தே வாக்களித்திருக்கிறது.

## பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு: சில கேள்விகள்

பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு செய்யக் கொண்டு வரப்பட்ட சட்டம், சட்டத்தின் பார்வையில் நிலைக்குமா? இதை அமுல்படுத்துவது எப்படி?

- இடஒதுக்கீடு 50 சதவீதத்துக்கு மேல் போகக் கூடாது என்று தமிழ்நாட்டில் 69 சதவீத இட ஒதுக்கீட்டை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். இதனால் முன்னேறியப் பட்டியலில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சமமாகக் கூடுதல் இடங்களை ஒவ்வொரு ஆண்டும் உச்சநீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்று வந்தனர். அவர்கள் தான் இடஒதுக்கீட்டை உயர்த்துவதில் தவறு இல்லை என்று இப்போது வாதிடு கிறார்கள்.

- கல்வி வேலை வாய்ப்புகளில் பெரும் பான்மை ஆதிக்கத்தில் பாதிக்கப் படும் சிறுபான்மை மக்களுக்காகவே இட ஒதுக்கீடு என்ற சமுக நீதிப் பாது காப்புத் திட்டம் இப்போது தலைகீழாக மாற்றப்பட்டு விட்டது. கல்வி வேலை வாய்ப்பு களில் ‘போதிய பிரதிநிதித்துவம்’ இல்லாத சமுகத்துக்குத் தான் (Adequate Representation) இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. முன்னேறிய சமுக ஏழைகளில் போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்பதற்கு அரசிடம் ஏதேனும் தரவுகள் இருக்கிறதா? இது குறித்து ஆராய குழுவோ, ஆணையமோ நியமித்ததா? எதுவுமே இல்லாதபோது ஜாட்டுகளும் பார்ப்பனர்களும் கோரிக்கை வைத்தார்கள் என்பதற்காகவே ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடியுமா?

- பொருளாதார வரம்பு நிலையானது அல்ல; அது மாதத்துக்கு மாதம் மாறக் கூடும். ஆனால் ஜாதியமைப்பில் ஒரு சமுகத்தின் நிலை என்பது மாறாதது. அரசு ஊழியர் அகவிலைப்படி உயர்வு பெற்றால்கூட சில நேரங்களில் 8 இலட்சம் வருமான வரம்பு உயர வாய்ப்பு உள்ளது. ‘பிற்படுத்தப் பட்டோர்’ என்பவர்கள் வருமான வரம்பு மாறும் போதெல்லாம் ‘பிற்படுத்தப்பட்டோராகவும்’ ‘முன்னேறிய ஜாதியினராகவும்’ மாறிக் கொண்டே இருக்க முடியுமா?

- நாளொன்றுக்கு ரூ.32க்குக் கீழே வருமானம் உள்ளவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வருவார்கள் என்று மத்திய அரசு நிர்ணயித் திருக்கிறது. இப்போது ஆண்டுக்கு ரூ.8 இலட்சம் வருமானத்துக்கு உட்பட்டவர்கள் ‘ஏழை’கள் என்றால் வறுமைக் கோட்டின் அளவு ரூ.2100 ஆக உயர்ந்து விடுகிறது. ஆக வறுமைக் கோட்டின் அளவை இந்த திட்டத் தின் கீழ் நடுவண் ஆட்சி மாற்றி அமைத்து விட்டதா? - என்று கேட்கிறார் திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் டெரிக் ஒபிரய்ன்.

# கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

4.01.2019 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தாக்கல் செய்திருந்த ரிட் மனு எண்.27748/2005 விசாரணையின்போது சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.எம். சிவசுப்பிரமணியன் தமிழகம் முழுவதும் பாதைகள், நீர்நிலைகள், புறம் போக்கு நிலங்கள் ஆகியவற்றில் சட்டவிரோதமாக எந்தவிதமான அரசு அனுமதி இல்லாமல் கட்டப் பட்டுள்ள சர்ச்சுகள், மசூதிகள், கோயில்கள் ஆகியவை அகற்றப்பட வேண்டும் என்று கருத்து தெரிவித்து அது தொடர்பாக தமிழகம் முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் இவ்வாறு கட்டப்பட்டுள்ள வழிபாட்டுத்தலங்கள் பற்றிய புள்ளிவிவரங்களை 21/01/19 தேதிக்குள் நீதிமன்றத்துக்கு அளிக்குமாறு தமிழக அரசுக்கும் அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கழகத் தோழர்கள் அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் ஆகியோரை சந்தித்து அந்தந்த மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள சட்ட விரோத வழிபாட்டுத் தலங்கள் பற்றிய புள்ளி விவரங்களை அளித்து விரிவான அறிக்கை அனுப்பி வைக்குமாறு கோரிக்கை மனுக்களை அளிக்க வேண்டுகிறோம். தங்கள் பகுதியில் உள்ள சட்டவிரோத கோயில்களின் பட்டியல்களையும் அதிகாரிகளிடம் வழங்கலாம். கழகத் தோழர்கள் இதில் முனைப்புடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

- கொளத்தூர் மணி
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்

## கடலூர் –அரியலூர் மாவட்டக் கழகக் கலந்துரையாடல்

08.01.2019 திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக கடலூர் மற்றும் அரியலூர் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் கருவேப்பிலங்குறிச்சி வசந்தா திருமண நிலையத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றார். முதல் நிகழ்ச்சியாக கழகத்தின் பொருளாளர் திருப்பூர் துரைசாமி கழகக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகப் பெரியார் சிந்தனைப் பலகை தலைவரால் திறந்து வைக்கப்பட்டது. கடவுள் மறுப்பை மதன்குமார் கூறினார். அறிவழகன் வரவேற்புரையாற்றினார். துவக்க உரையாக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமிதிராவிடர் விடுதலை கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும் பெரியாரியல் குறித்தும் பேசினார்.

தமிழ்நாடு மாணவர் கழக மாநிலச் செயலாளர் பாரி சிவக்குமார், பொருளாளர் திருப்பூர் துரைசாமி, சூலூர் பன்னீர்செல்வம், அய்யனார், பழனிவேல் (ஆசிரியர்), முத்துகிருஷ்ணன், அரியலூர் மாவட்ட அமைப்பாளர் கோபால் இராவணன், நட பாபு அம்பேத்கர், கண்மணி, நட பாரதிதாசன் ஆகியோர் பேசினர். கடலூர் மாவட்ட செயல்பாடுகள் குறித்து விவரிக்கப்பட்டது. அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும் பேசப்பட்டது. இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். புதிய பொறுப்பாளர்களை கழகத் தலைவர் அறிவித்தார்.

**கடலூர் மாவட்ட புதிய பொறுப்பாளர்கள்:** மாவட்டத் தலைவர் நட பாரதிதாசன், மாவட்ட செயலாளர் முத்துகிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் மதன்குமார், அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் அறிவழகன், மாவட்ட துணைத் தலைவர் சூரியா, மாவட்ட துணைச் செயலாளர் நட பாபு அம்பேத்கர், விருத்தாசலம் நகர அமைப்பாளர் சதீஷ்குமார், விருத்தாசலம் ஒன்றிய அமைப்பாளர் ஆகாஷ், கம்மாபுரம் ஒன்றிய அமைப்பாளர் சிலம்பரசன், தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டச் செயலாளர் பாலாஜி.

## காவலாண்டியூர் கழகத் தோழர் ஈசுவரன் தந்தையார் முடிவெய்தினார்



கழகத் தோழர் கொளத்தூர் ஒன்றிய செயலாளர் காவை ஈசுவரன் தந்தையார் பெ. கந்தசாமி, (87) (காவலாண்டியூர் கிளைச் செயலாளர் அ.தி.மு.க.), 5.1.2019 அன்று அதிகாலை மாரடைப்பால் உயிரிழந்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் கழகத் தோழர்கள் பலரும் வந்திருந்து இறுதி மரியாதை செலுத்தினர். எந்த சடங்குகளுமின்றி பெண்களே சுமந்து சென்றனர்.

6.1.2019 அன்று காவலாண்டியூரில் பெ. கந்தசாமி உருவப்படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து உரையாற்றினார். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, மேட்டூர் ஆர்.எஸ். சக்தி, ஈரோடு மாவட்டத்தலைவர் நாத்திக ஜோதி, கொளத்தூர் பஞ்சாயத்து தலைவர் தா.செ. பழனிச்சாமி, திராவிடர் கழகப் பொறுப்பாளர் பிரகலாதன், கொளத்தூர் ஒன்றிய செயலாளர் மனோகரன் (அதிமுக), கொளத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் இரத்தினம், கொளத்தூர்துணைத் தலைவர் சுந்தர்ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு மரியாதையை செலுத்தினர்.

## கழகத் தோழர் இரா. விஜயகுமார் தாயார் மறைவு



சேலம் மாவட்டம் கொளத்தூர் தார்காடு கிளை கழகத் தோழர் இரா.விஜயகுமார் (இராணுவ ஓய்வு) தாயார் ஆர்.என்.காசிமதி (71) உடல் நலக்குறைவுக் காரணமாக 09.01.2019 அன்று காலை 10.00 மணிக்கு அவர்களது இல்லத்தில் முடிவெய்தினார். கழக மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் மறைந்த காசிமதி உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

பெரியாரியல் சிந்தனையாளரும் காசிமதி கணவருமான இராமசாமி (ஆசிரியர் ஓய்வு), மகன்கள் விஜயகுமார், சசிகுமார் ஆகியோர் காசிமதியின் உடலை எந்தவித சடங்குகளும் இன்றி சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரிக்கு மருத்துவ மாணவர்கள் ஆய்வுக்காக கையளித்தனர். தோழர்கள் கடந்த 2009ஆம் ஆண்டு தனது தாயாரின் உடல் கொடைக்கு பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. தோழர்களின் இச்செயல்களை நிகழ்வுக்கு வந்திருந்த பொதுமக்கள் அனைவரும் பாராட்டினர்.


## தற்போது விற்பனையில்

### ‘நிமிர்வோம்’ – ஜனவரி 2019 இதழ்

- தலையங்கம் - திசை வழிகாட்டிய திருச்சிப் பேரணி
- கருஞ்சட்டை - எதிர்நீச்சலின் வரலாறு
- பாரதியின் பார்ப்பனியம் : பெரியார் எழுப்பிய கேள்விகள்
- பெண்கள் மீதான வன்முறைக்கு கருத்தியலை வழங்கும் புராணங்கள் - சாஸ்திரங்கள்
- அய்.நா.வில் தலித் பெண்கள் சமர்ப்பித்த ஆவணம்
- ஒற்றைக் கலாச்சாரத் திணிப்பில் பார்ப்பனர்கள் வெற்றி பெற்றது எப்படி?
- பெண்களின் புனிதத்தைக் கெடுக்கிறதா ஸ்மார்ட் போன்கள்?

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...




தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

## பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள் (4)

# கருஞ்சட்டைப் படைக்கு விதித்தத் தடை

*22.9.2018 அன்று பெரம்பூரில் வடசென்னை மாவட்டக் கழகம் நடத்திய கருத்தரங்கில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் 'பெரியார் இயக்கம் சந்தித்த அடக்குமுறைகள்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையி லிருந்து.*

1945ஆம் ஆண்டு செப்டம்பர் 24ஆம் தேதி திருச்சி புத்தூர் மைதானத்தில் 17ஆவது தென்னிந்திய நல உரிமைச் சங்க (நீதிக் கட்சி) மாநாடு பெரியார் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகம் தொடங்கப்பட்டிருந்தாலும் இது நீதிக்கட்சியின் 17ஆவது மாநாடாக நடைபெற்றது. நீதிக் கட்சியின் 'தராசுக் கொடியே' மாநாட்டிலும் ஏற்றப்பட்டது. 'தராசுக் கொடி' சமநீதி தத்துவத்தைக் கொண் டிருந்தாலும் புரட்சிக்கான அடையாளமாக இல்லை என்ற கருத்து முன் வைக்கப்பட்டு, அதற்குப் பிறகு கொடி உருவாக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, திராவிடர் கழகக் கொடி உருவாக்கப்பட்டது. அடுத்த நாள் செப். 20ஆம் தேதி சுயமரியாதை இயக்கத்தின் 4ஆவது மாநில மாநாடு நடைபெற்றது. அண்ணா மாநாட்டு வரவேற்புக் குழுவின் தலைவர். அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி சிறப்புரை யாற்றினார். எம்.ஆர். ராதாவின் நாடகம் நடந்தது. மாநாட்டையொட்டி திருச்சியில் நடந்த ஊர்வலத்தை திட்டமிட்ட பாதையில் செல்ல காவல்துறை அனுமதி மறுத்து, வேறு வழியில் போகுமாறு கூறியது. தோழர்கள் கொதித்தெழுந்தனர். பெரியார், தோழர்களிடம், 'அரசு சொல்லும் வழியிலேயே போவோம்' என்று சமாதானப்படுத்தினார்.


இதற்கு ஒரு மாதத்துக்கு முன்பு புதுவையில் 1947 ஜூலையில் புரட்சிக் கவிஞர் பாரதாசன் ஏற்பாடு செய்த திராவிடர் கழக தொடக்க விழாவிலும் பெரியார் உரை நிகழ்த்தியவுடன் காங்கிரசார் வன்முறையில் இறங்கி கழகக் கொடி மரங்களை வெட்டி வீழ்த்தி கலவரம் செய்தனர். பெரியாரை - ஒரு ரிக்ஷாவில் ஏற்றிப் பாதுகாப்பாக கழகத் தோழர் ராமலிங்கம் என்பவர் இல்லத்துக்கு அனுப்பி வைத்தனர். கூட்டத்தினரிடம் சிக்கிக் கொண்ட கலைஞர் கருணாநிதி, காஞ்சி கல்யாணசுந்தரம் தாக்கப்பட்டனர்.

டிசம்பர் 23, 2018 திருச்சிப் பேரணிக்காக சில பாடல்கள் முகநூல்களில் பதிவிடப்பட்டது போல் 1945இல் நடந்த திருச்சி மாநாட்டுக்காக பென்னாகரம் நடேசேன் என்ற கழகத் தோழர் ஒரு பாடலை இயற்றிக் கொண்டு வந்திருந்தார். 'குடிஅரசு' ஏட்டில் மக்கள் மெட்டமைத்துப் பாடக் கூடிய பல பிரச்சாரப் பாடல்களை எழுதியவர் பென்னாகரம் நடேசன். "இன்னும் என்ன செய்யப் போறீங்க? சட்டசபையை எந்த முறையில் நடத்தப் போறீங்க? சொல்லுங்க நீங்க?" என்பதே இப்பாடல். அந்தப் பாடலின் சந்தம் பெரியாரை மிகவும் கவர்ந்து விட்டது. பெரியாரே மெட்டமைத்துப் பாடிப் பார்த்தார். பாடல் நன்றாக வந்தவுடன் மகிழ்ச்சி அடைந்து, அந்தப் பாடலை 10,000 பிரதிகள் அச்சிட்டு திருச்சி மாநாட்டில் பரப்பினார். அதே திருச்சி மாநாடு திராவிடர் கழகத்துக்கு பெரியார் தான் இனி நிரந்தரத் தலைவர் என்று முடிவு செய்தது. அதைத் தீர்மானமாகவும் நிறைவேற்றியது. அதே திருச்சி மாநாட்டில் தான் திராவிடர் விடுதலைப் படை என்பதாக ஒரு தொண்டர் படை திராவிடர் கழகத்துக்குத் தேவை என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

பெரியார் திருச்சியி லிருந்து ஈரோடு திரும்பியதும் இது குறித்து தீவிரமாக சிந்தித்து, 'கருப்புச் சட்டைப் படை அமைப்பு' என்பதாக ஒரு அறிவிப்பை 1945 செப்டம்பர் 29ஆம் நாள் 'குடிஅரசு' இதழில் வெளியிட்டார். ஈ.வெ.கி. சம்பத், எஸ். கருணானந்தம் ஆகிய இருவரும் தற்காலிக அமைப்பாளர்கள் என்றும் அறிவித்தார். கருஞ்சட்டைப் படையின் முதல் தொண்டராக கலைஞர் கருணாநிதி தன்னை ஈரோட்டில் பதிவு செய்து கொண்டார்.

நாடெங்கும் கருஞ்சட்டை அணிவோர் எண்ணிக்கை அதிகரித்தது. மதுரையில் கருஞ் சட்டைப் படையின் முதலாவது மாநில மாநாடு 1946 மே மாதம் 11, 12 நாட்களில் மதுரையில் கூடியது. மாநாட்டின் தலைவர் பெரியார்; திறப்பாளர் அண்ணா; எம்.ஆர். ராதாவின் 'போர்வாள்' நாடகமும் அண்ணாவின் 'அவன் பித்தனா' நாடகமும் ஏற்பாடாகியிருந்தது.

மதுரை வைகை ஆற்று மணற்பரப்பில் வேயப்பட் டிருந்த மாநாட்டுப் பந்தலுக்கு வன்முறையாளர்கள் தீ வைத்துக் கொளுத்தினர். கழகத் தோழர்கள்



இல்லங்கள், கழக அலுவலகங்கள் சோதனைக்கு உள்ளாயின. காலிகள் வன்முறை தாக்குதலில் இறங்கினர். தமிழகம் முழுதும் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு கழகக் கொடிகள் வெட்டிச் சாய்க்கப்பட்டன. மதுரை வைத்தியநாத அய்யர் என்ற தேசியப் பார்ப்பனர், இந்த வன்முறையைத் திட்டமிட்டு நடத்தினார்.

அப்போது ஓமந்தூர் ராமசாமி (ரெட்டியார்) முதல்வர். காங்கிரஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. பார்ப்பன ஏடுகள் கருஞ் சட்டைப் படைக்கும் பெரியார் இயக்கத்துக்கும் எதிராக எழுதி அரசை தூண்டி விட்டன. திராவிடர் கழகத்தின்மீது அரசு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. கிரிமினல் சட்டத் திருத்தம் 15ஆவது விதியின் கீழ் கருப்புச் சட்டைப் படைக்கு 1948 மார்ச் 26ஆம் தேதி கருஞ் சட்டைப் படையை ஓமந்தூரார் ஆட்சியில் உள்துறை அமைச்ச ராக இருந்த சுப்பராயன் தடை செய்தார். "என்னை அழிக்க நினைத்தால் அது என் அழிவல்ல பிராமண அழிவேயாகும்" என்று பெரியார் அறிக்கை விடுத்தார் (27.3.1948 'குடிஅரசு').

### பெரியார் அறிக்கை

கருஞ்சட்டைப் படைக்கு தடை விதித்தவுடன் பெரியார் ஒரு அறிக்கை விடுத்தார். 11.3.1948 'விடுதலை'யில் வெளி வந்த அறிக்கையிலிருந்து சில பகுதிகள்:

*கறுப்புச் சட்டையை நம் இயக்கச் சின்னமாக்கி, சிலருக்கு அதை சில சமயங்களுக்கு அவசிய உடையாக்கிவிட்டு, திராவிடர்கள் யாவரும் பிறவி இழிவுக்காக அவமானப்படும், துக்கப் படும் அறிகுறியாக திராவிடர் கழகத் தோழர்கள், தாய்மார்கள், இளைஞர்கள் அனைவரும் கறுஞ்சட்டை அணிந்து கொள்ள வேண்டு மென்று வேண்டுகோள் செய்தோம்.*

*சட்டத்தில், சாஸ்திரத்தில், சம்பிரதாயப் பழக்க வழக்கத்தில், கோயில் முறையில், சாதி முறையில் நமக்கு இருந்துவரும் இழிவை எடுத்துக்காட்டினோம். அதன் அறிகுறிதான் கறுப்பென்றோம். அந்த இழிவு அழிக்க முயற்சி எடுத்துக்கொள்ளத் தீர்மானித்து விட்டோம் என்பதைக் காட்ட கறுஞ்சட்டை அணியுங்கள் என்றோம். யாராவது, ஏனப்பா கறுஞ்சட்டை அணிந்து கொள்கிறீர்கள்? என்று கேட்டால், நான் என்னமோ சட்டப்படி, சாஸ்திரப்படி சூத்திரனாம்; பார்ப்பானின் தாசி மகனாம்; அப்படி இருக்க எனக்கு இஷ்டமில்லை. அது எனக்கு அவமானமாக, துக்ககரமானதாக இருக்கிறது. அந்த இழிவை உணர்ந்திருக்கிறேன். அதைப் போக்கிக் கொள்ள முயற்சிப்பேன் என்பதன் அறிகுறியாக இதை அணிந்து கொள் கிறேன்; உனக்கும் அவமானமாயிருந்தால் அணிந்து கொள்; அப்படி உனக்கு மானமில்லை யானால் கறுப்புச் சட்டை அணிந்து கொள்ள வேண்டாம் என்று பதில் கூறும்படியும் தெரிவித்தோம்.*

*யாராவது, என்னடா, இழவுக்குப் போகின்றவன் மாதிரி கறுப்புடை அணிந்திருக்கிறாயே; அல்லது நீ என்ன திருட்டுப் பயலா? என்று கேலி செய்தால், இது ஒன்றும் அப்படி அல்லப்பா; இழிவு போக்கும் முயற்சியின் அறிகுறிதானப்பா இந்தக் கறுப்புச் சட்டை; கறுப்புடை அணிந்து கொள்வதற்காக என்னைச் சாவுக்குப் போகிறவன் என்றோ, திருடப் போகிறவன் என்றோ கூறினால், கறுப்புடை அணிந்து கோர்ட்டுக்குச் செல்லும் வக்கீல் எல்லாம் என்ன இழவுக்கா போகிறார்கள்? அல்லது, திருடத்தான் போகிறார்களா? கோர்ட்டில் கறுப்புடை அணிந்து நீதி வழங்கும் நீதிபதிகள், வெயிலுக்குக் கறுப்புக் குடை பிடித்துச் செல்வோர் பள்ளி ஆசிரியர் இவர்கள் எல்லாம் என்ன, இழவுக்குப் போகிறார்களா? கறுப்புடையணிந்து பட்டம் பெறும் பட்டதாரிகள் எல்லாம் என்ன, இழவுக்குப் போகிறார்களா? கறுப்புடையணிந்து பட்டம் பெறும் பட்டதாரிகள் எல்லாம் திருட்டுத்தனத் திற்காகவா பட்டம் பெறுகிறார்கள்? என்றெல் லாம் கேளுங்கள் என்று கூறினோம். அதைக் கேட்ட மக்கள் பெருவாரியாக கறுஞ்சட்டை அணிய ஆரம்பித்தனர். குறிப்பாக இளைஞர்கள் பலர் உற்சாகத்தோடு அணிந்து கொண்டனர். கறுப்புச் சட்டை அணிந்து செல்வதை ஒரு பெருமையாகக் கூடப் பலர் கருத ஆரம்பித்து விட்டனர்.*

*இதைக் கண்ட இழிவில்லாதவர்களும், மற்றவர்களை இழிவுபடுத்தி வாழுபவர்களுமான சுயநலக் கூட்டம் ஆத்திரப்பட்டு, இதை ஒழிக்க வேண்டுமென்று முயற்சித்தது. அதற்குக் கையாளாக இருக்கும் காங்கிரஸ் சர்க்கார் கறுப்புச் சட்டைப் படை ஒன்று இருப்பதாகக் கற்பனை செய்து தடை உத்தரவு போட்டு விட்டது.*

*உண்மையாகவே இது ஓர் படை அமைப் பாகுமானால் இதில் வயது முதிர்ந்த கிழவிகளும், சின்னஞ்சிறு குழந்தைகளும் சேர்ந்திருக்க முடியுமா? இன்று கறுப்புடை அணிந்திருக்கும் இத்தனை பேர்களுக்கும் இந்தப் படையில் இடமிருக்குமா? இவ்விழிவு நீங்க வேண்டு மென்று எத்தனை பேர் முன் வந்துள்ளார்கள் என்பதை மக்கள் அறிய வேண்டும்; அதன் மூலமாக இயக்கத்தின் உண்மைத் தன்மை மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் மேலும் மேலும் கறுஞ்சட்டை அணிந்து கொள்வதை வற்புறுத்தி வந்திருக்கிறோம். கறுப்புத் துணி தாராளமாய்க் கிடைத்திருந்தால் இன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கறுப் புடை அணிந்திருப்பார்கள். இந்தக் கறுஞ் சட்டைக்கு எந்த ஒரே ஒரு மாதிரியையும் குறிப்பிடவில்லை. யார் வேண்டுமானாலும் எந்த மாதிரிச் சட்டையை வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம் என்றும், பெண்கள் ஒரு இரவிக்கையாவது அணியட்டும் என்றும் கூறினோம்.*

*கறுஞ்சட்டை அணிபவர்களை யாருக் காவது தொல்லை கொடுக்கும்படியோ யாரையாவது துன்புறுத்தும்படியோ நாங்கள் கூறியது இல்லை. அவர்களை ஏதாவது ஒரு ஆயுதத்தையோ, தடியையோ, வேறு அறிகுறியையோ வைத்துக் கொள்ளும்படியும் நாங்கள் கூறியதில்லை. அவர்களைத் தெருவில் நிறுத்தி கவாத்துப் பழகும்படியும் நாங்கள் கூறவில்லை. அதற்கான பயிற்சியாளர்களோ, பயிற்சிக் கூடமோ நாங்கள் வைத்திருக்கவில்லை. எங்காவது மகாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்த அழைக்கப்பட்ட தலைவருக்கு ஊர்வலம் நடைபெறுமானால், அங்கு கறுப்புடை அணிந்துள்ள தோழர்கள், சிறுவர்கள், தாய்மார்கள் யாவரும் ஒருவர்பின் ஒருவராக வரிசையாக நின்று ஊர்வலம் செல்வார்கள். ஒரு சில இடங்களில் உற்சாகத்திற்காக, வந்துள்ள தலைவர்களைத் தம்முடன் நிறுத்திப் போட்டோ எடுத்துக் கொள்வார்கள். தங்கள் ஊர்வலத்தைக் கறுஞ்சட்டைத் தொண்டர் ஊர்வலம் என்று பல மாதிரியாய்ப் பெயரிட்டு அழைப்பார்கள். இவ்வளவு தானேயொழிய இவர்கள் ஒருபோதும் பலாத்காரத்தில் இறங்கியதாகவோ, அல்லது எப்போதேனும் இவர்களுக்குப் பலாத்கார உணர்ச்சி ஊட்டப்பட்டதாகவோ யாராலும் கூற முடியாது.*

*சர்க்கார் கனவு கண்டிருக்கலாம், ஒரு தடையுத்தரவு பிறப்பித்து விட்டால் இவர்கள் ஆத்திரப்பட்டு ஏதாவது செய்வார்கள்; அதையே சாக்காக வைத்துக் கொண்டு திராவிடர் கழகத்தையே அடியோடு கலைத்து விடலாம் என்று. நாங்களென்ன மடையர்களா? நம் ஆட்களை நம்மவனையே கொண்டு அடிக்கச் செய்ய? தடையுத்தரவு பிறப்பிக்கு முன் உனக்கு அறிவிருந்தால் சிந்திக்க வேண்டாமா? இந்த இயக்கம் எத்தனை காலமாக இருந்து வருகிறது? இதுவரை எந்தெந்த இடத்திலாவது, சர்க்காருக்கு ஏதாவது தொந்தரவு கொடுத் திருக்கிறதா என்று?*

*நமக்கு வேண்டுமானால் சர்க்கார் எவ்வளவோ தொல்லை கொடுத்து இருக்கிறது. மதுரையில் நடந்த கறுஞ்சட்டை மாநாட்டின் போது சில காலிகளால் எங்கள் பெரிய பந்தலுக்கு பட்டப்பகல் 12.30 மணிக்குத் தீ வைக்கப்பட்டபோது ஜில்லா சூப்பிரண்டெண்டு முதல் அதிகாரிகள், மாஜிஸ்ட்ரேட் அனை வருந்தான் பார்த்துக் கொண் டிருந்தார்கள், ஒழுங்காகத் தீ மூட்டப்படுகிறதா என்று. கொஞ்சம் தடுத்திருந்தால்கூட அன்று ஒரு 50 ஆயிரம் ரூபாய் பொருள் சேதம் ஏற்பட்டிருக்காது. ஏனென்று ஆட்சியாளர்கள் கேட்டதுண்டா? ஏதோ விசாரணை ஒன்று தலைவர்கள் நடத்தினார்கள். அதன் முடிவு என்ன என்று கேட்டால், அது*

(4ஆம் பக்கம்)

– புரட்சிப் பெரியார் முழக்கம் 17.01.2019

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 ~~LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018~~
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# காவல்துறை அதிகாரிகள் முன்பாகவே தீயிட்டார்கள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியம், சொல்ல முடியாது என்று கூறிவிட்டார்கள். சமீபத்தில் சங்கீத மங்கலத்தில் எங்கள் கழகத் தோழர்கள் காங்கிரஸ் காலிகளால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். போலீஸார்கூட தமது எப்.ஐ.ஆர். புத்தகத்தில் குற்றவாளிகளைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர் என்றாலும், அவர்கள் மீது எதுவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. சேலத்தில் சில காலிகளால் சோடா புட்டி வீசப்பட்டு எங்கள் தோழர் ஒருவருக்குக் கண்ணில் காயம்பட்டு 20 நாள் ஆஸ்பத்திரியில் கிடந்தார்; முடிவில் கண்ணை இழந்தார். அதற்காக நியூசன்ஸ் சார்ஜ் செய்து 2 ரூபாய் அபராதம் விதித்தார்கள். அண்ணாமலை காலேஜில் திராவிடர் கழக மாணவர்களை நடுச்சாமத்தில் போலீஸை வைத்துக் கொண்டு அடித்துப் புடைத்து, கடைசியாக அடித்தவர்கள் மீதுள்ள பிராதை வாபஸ் வாங்கிக் கொண்டு உதைப்பட்டவர்கள் மீது கேசு நடக்கிறது. வேறு எந்த மலைசாதி அரசாங்கமாவது இப்படிப்பட்ட கொடுங்கோல் ஆட்சி நடத்துமா? இவ்வளவையும் நாங்கள் பொறுத்துக் கொண்டுதானே வந்திருக்கிறோம்!

எங்கள் கழகத் தோழர்கள் சிலர் ஆத்திரப்படும்போதுகூட, ஆத்திரப் படாதீர்கள்; ஆத்திரப்பட்டால் இரண்டு கட்சியிலும் அடிபடுபவர் நம்மவராகத தான் இருக்க நேரிடும்; ஆகவே, சமாதானமாக நடந்து காங்கிரஸ் திராவிடத் தோழர்களின் அன்புக்குப் பாத்திரமாகுங்கள் என்று தானே அவர்களுக்குச் சமாதானம் கூறி வந்திருக்கிறோம்! இதை யாராவது இல்லையென்று கூற முடியுமா? இந்த உண்மையெல்லாம் சர்க்காருக்குத் தெரியாமலா இருக்கிறது? அல்லது, எங்கள் நடத்தையாவது இதற்கு மாறுபட்டிருந்தது என்று யாராவது கூற முடியுமா? தெரிந்திருந்தும் ஏன் இந்த வீண் வேலை? கனம் சுப்பராயன் அவர்கள், 'பலாத்காரத்தைக் கையாளாத யாரையும் நாங்கள் வீணாகத் தொல்லை கொடுக்கப் போவதில்லை' என்று வானொலிப் பேச்சில் கூறினார் என்று கேட்டு அவருடைய நல்லெண்ணத்தில் நம்பிக்கைக் கொண்டு, அதற்காக அவரைப் பாராட்டி மெமோரியல் ஹாலில் பேசி விட்டு வீட்டிற்குப் போகிறேன்; அங்கு தந்தி வந்து சேருகிறது. திருவண்ணா மலையிலிருந்து கறுஞ்சட்டை போட்டுக் கொண்டு இருந்ததற்காகவும் கழகத்தில் அலுவலக கருப்புக் கொடியை இறக்காததற்காக வும், கழகத்துக்கு வந்து, ஆறு தோழர்கள் கைதி யாக்கப்பட்டு லாரியில் ஏற்றிச் செல்லப் பட்டார்கள் என்று. கைது ஏன்? சர்க்காருக்கு, மந்திரிக்கு, போலீசுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்றா அவர்கள் கருப்புக் கொடி பறக்க விட்டிருந்தார்கள்? எதற்காக அவர்களைக் கைதியாக்கி இருக்க வேண்டும்? எந்த அடக்கு முறைக்கும் சமாதானத்தோடு உட்பட்டு விடுவதுதானே எங்கள் வழக்கம்! இராஜகோபாலாச் சாரியார் ஆட்சியில்கூட நாங்கள் எதிர்வழக்குக்கூட ஆடியதில்லையே! அடக்கியே ஆள்வதென்று நீங்கள் தீர்மானித்திருந்தால் அதற்கு ஒரு முறை வேண்டிய தில்லையா? இன்று நிர்வாகக் கமிட்டி கூட்டப் போவதறிந்து எத்தனை தோழர்கள் எனக்கு எழுதி இருந்தார்கள் தெரியுமா? 'எதுவும் பயங்கொள்ளித்தனமாகத் தீர்மானித்து விடாதீர்கள்; உங்களுக்குப் பயமாயிருந்தால் சற்று விலகியிருந்தாவது, எங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள எங்களை அனுமதித்து விடுங்கள்' என்று. இவற்றைக் கமிட்டி அங்கத்தினர்களுக்குக்கூட நான் படித்துக் காட்டவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? எப்படியும் சமாதானமாக, அமைதியாக நடந்து கொள்ள வேண்டுமென்று பார்த்தால் ஆட்சியாளர்கள் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள்போல் இருக்கிறதே! இதுதானா காந்தி பேரைச் சொல்லிக் கொண்டு பதவிக்கு வந்த யோக்கியர்கள் நடத்தை? ஒரு கட்சியால் தங்கள் பதவிக்கு ஆபத்து நேரும் என்று கருதினால், அதை இப்படித்தானா காட்டிக் கொள்ள வேண்டும்? அதுவும், காந்தியாரைக் கொன்று கரைத்துவிட்ட ஒரு மாதத்திலேயா? இந்தப் பதவி என்ன சதமா? பதவி போன பிறகு மக்கள் முன் தலைகாட்ட வேண்டாமா? - என்று பெரியார் அறிக்கை விடுத்தார்.

அத்துடன் கழகத்தோழர்கள் மட்டுமல்லாது திராவிடர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் நாங்கள் இழி மக்கள் அல்லர் என்பதைக் காட்டும் வகையில் அனைவரையும் கருஞ்சட்டை அணியச் சொல்லுங்கள் என்றும் அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.





## 2019 நாள்காட்டி

**திராவிடர் விடுதலைக் கழகத்தின் 2019ஆம் ஆண்டு மாத நாள் காட்டி !**

விலை : ரூ.70/- (ரூபாய் எழுபது மட்டும்)

பெரியார், அண்ணல் அம்பேத்கர், மேதகு பிரபாகரன், கலைஞர், அறிஞர் அண்ணா, காமராஜர், எம்.ஆர்.ராதா, புரட்சிக் கவிஞர் படங்களுடன் அழகிய வடிமைப்பில், வரலாற்று குறிப்புகளுடன் உள்ள மாத நாள்காட்டி.

குறைந்த அளவே அச்சிடப்பட்டு உள்ளது.

நாள்காட்டி தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவேண்டிய எண் :

**தோழர் தபசி குமரன்**
அலைபேசி எண் : 9941759641
தலைமை நிலையச் செயலாளர்,
திராவிடர் விடுதலைக் கழகம்.

(திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட நிர்வாகிகளிடமும் நாள்காட்டி கிடைக்கும்)


# இடஒதுக்கீட்டின் நோக்கமே சிதைகிறது!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் ஆட்சி முயற்சி செய்து பிறகு அதை கைவிட்டுவிட்டது. இப்போது முன்னேறிய ஜாதி யினருக்கு மட்டும் இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்திருப்பது மிகப் பெரும் சமூக அநீதி.

- 'இந்து' ஆங்கில நாளேடு ஜன.9ஆம் தேதி இது குறித்து எழுதியுள்ள தலையங்கத்தில் பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீடு திட்டம் சமூகநீதியைவிட அரசியல் நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது என்று எழுதி யிருக்கிறது. 50 சதவீதத்தைவிட கூடுதலாக இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமானால், அதைத் தவிர்க்கவியலாத சூழலில் தான் கொண்டு வரலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. இப்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்துக்கு 'தவிர்க்கவியலாத சூழல்' என்ற காரணம் பொருந்தி வராது. பொருளாதாரத்தில் ஒருவர் நலிந்திருக்கிறார் என்பதற்காக, அவருக்கு சிறப்பான வாய்ப்புகளை சட்டப்படி உருவாக்கித் தர வேண்டும் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்குமா? சமூக கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட மக்களின் ஆண்டு குடும்ப வருமானம் 8 இலட்சத்துக்குள்ளாக இருக்க வேண்டும் என்று 'கிரிமிலேயர்' நிர்ணயிக்கப்பட் டுள்ளது. சமூகக் கல்வி ரீதியாக முன்னேறிய பிரிவினருக்கும் அதே ரூ.8 இலட்சம் கிரிமிலேயராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பின்தங்கிய பிரிவினரையும் முன்னேறிய பிரிவினரையும் ஒரே பொருளாதார வரம்பை வைத்து நிர்ணயிக்க முடியுமா? போதுமான பிரதிநிதித்துவம் இல்லாத பிரிவினருக்கு வேலை வாய்ப்புகளில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற சட்டப் பிரிவு ஏற்கனவே போதுமான அளவையும் மீறி பதவிகளில் இருக்கும் பிரிவினருக்கு எப்படிப் பொருந்தும்? என்ற கேள்விகளை எழுப்பியுள்ள 'இந்து' ஆங்கில நாளேடு, பொருளாதார வசதி இல்லாதவர்களுக்கு கல்வி வேலை வாய்ப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்பதற்கு அரசிடம் ஏதாவது புள்ளி விவரங்கள் இருக்கிறதா என்ற கேள்வியையும் எழுப்பி இருக்கிறது.
- பொருளாதார அடிப்படையில் மட்டும் இட ஒதுக்கீடு என்ற பா.ஜ.க. ஆட்சியின் முடிவு - எதிர் காலத்தில் படிப்படியாக - ஜாதிய ஒடுக்கு முறையால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்க வந்த இடஒதுக்கீட்டின் நோக்கத்தையே சிதைத்து விடும் பொருளாதார அளவுகோல் ஆபத்துக்கு வழி வகுத்துவிடும். அதற்கான ஓட்டை இப்போது போடப்பட்டுள்ளது.
- அரசியல் சட்டப்படி உறுதி செய்யப்பட்ட பட்டியல் இனப் பிரிவுக்கான இடஒதுக்கீட்டில் 'கிரிமிலேயர்' என்ற பொருளாதார வரம்பைப் புகுத்த முடியாது என்று 1992ஆம் ஆண்டில் 9 நீதிபதிகளடங்கிய அரசியல் சட்ட அமர்வு தீர்ப்பளித்தது. ஆனால் பதவி உயர்வில் இடஒதுக்கீடு வழங்க முடியாது என்று கூறியது. கடந்த செப்டம்பர் மாதம் 26ஆம் தேதி தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு பட்டியல் இனப் பிரிவுக்கு பதவி உயர்வு வழங்குவது குறித்து அந்தந்த மாநில அரசுகளே முடிவு எடுக்கலாம் என்று தீர்ப்பளித்ததோடு அப்படி பதவி உயர்வு வழங்குவதற்கு 'பொருளாதார' வரம்பை நிர்ணயித்து விட்டது. எனவே பொருளாதார வரம்பு என்ற அளவுகோல் படிப்படியாக நுழையத் தொடங்கிவிட்டது.
- மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்கள் மசோதாவை நாடாளுமன்ற பரிசீலனைக் குழுவுக்கு (Select ) அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தினர். கனிமொழி கொண்டு வந்த இத் தீர்மானத்துக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தெலுங்கு தேசம் கட்சி உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்தனர். இந்தத் தீர்மானம் '155-18' என்ற அடிப்படையில் தோற்கடிக்கப்பட்டது.
- அ.தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் தம்பித்துரை மசோதாவைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார். 'நான் ஒரு சூத்திரன்' என்ற முறையில் இந்தப் பொருளாதார அளவுகோலை எதிர்க்கிறேன் என்றார்.
- மசோதாவை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பில் ஆதரித்தே வாக்களித்தன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறப்பினர் டி.கே. ரெங்கராஜன், மசோதாவை ஆதரித்துப் பேசியபோது கனிமொழி அவர் அருகே வந்து இது என்ன அநியாயம் என்று ஆவேசமாகக் கேட்ட காட்சி சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.
- மாநிலங்களவையில் மசோதாவை எதிர்த்து விழுந்த வாக்குகள் 7; ஆதரவு 149. நாடாளுமன்றத்தில் 7 வாக்குகள் எதிர்ப்பாகவும் 165 வாக்குகள் ஆதரவாகவும் கிடைத்துள்ளன. வெளி நடப்பு செய்தால் எதிர்த்து வாக்களிப்பதாகக் கருத முடியாது. அது எதிர்த்தோ அல்லது ஆதரித்தோ வாக்களிக்காமல் இருக்கும் ஒரு தந்திரமான இரட்டை நிலை. அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஏற்கனவே 'சஸ்பென்ட்' செய்யப்பட்டு இருப்பதால் அவைக்கு வரவில்லை.
- மண்டல் பரிந்துரையின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கு வேலை வாய்ப்பில் மட்டும் இடஒதுக்கீடு செய்ய 10 ஆண்டுகள் தேவைப்பட்டது (1989இல் வி.பி.சிங் உத்தரவு). மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கொண்டு வருவதற்கு 17 ஆண்டுகள் தேவைப்பட்டது. (2006இல் அர்ஜுன் சிங் காங்கிரஸ் அமைச்சரவையில் மனித வளத் துறை அமைச்சராக இருந்தபோது இதை சாதித்தார்)

ஆனால் பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டுக்கு அமைச்சரவை முடிவு செய்த அடுத்த இரண்டு நாட்களிலே மசோதா நிறைவேறிவிட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 18th January 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN